40

17

ஐயனார் சரிதமும் ::

:: தோத்திரப்பாடலும்

சாத்தமங்கலம்

ஐயனார் தேவஸ்தான வெளியீடு.

1947

Q2:417

N47

114132

உ

சிவமயம்.

ஐயனார் சரிதம்.

இஃது

உரத்தூர் வித்வத்திரு, சு. குஞ்சிதபாதம்பிள்ளை
அவர்களால் இயற்றப்பெற்று,

சாத்தமங்கலம், மணியம்
திரு. ச. அனந்தநாராயணப்பிள்ளை அவர்களால்

சிதம்பரம் கிராஸ்வேடு அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது.

சர்வசித்து வைகாசி.

முன்னுரை

உலகம் உய்யும் வண்ணம் மக்கள்பால் கருணை கூர்ந்து "மூலபண்டாரம்" என்னும் முத்தியை வழங்க இறைவன் பல்வேறு திருமேனிகொண்டு ஆங்காங்கு கோயில் கொண்டுள்ளார் என்பது சாத்திர உண்மை. அருளாட்சி செய்யும் சிவன் உலகப் பாதுகாப்பின் நிமித்தம் மோகினியென்னும் மாலோடு கூட ஐயனார் அவதரித்தனர் என்பது புராண வழக்கு. அவ்வையனார் அரிகரபுத்திரர் காரி, சாத்தனார் என்ற திருநாமங்களுடன் நாடு நகர்தோறும் கோயில்கொண்டு சிவன் ஆணை பெற்றுக் கிராமத் தெய்வங்களுள் முதற் றெய்வமென வீற்றிருக்கின்றார். உண்மை அறியாதார் சிறுதெய்வங்களுள் ஒருவராக எண்ணுவர். பழந் தமிழ் நூல்களிலும் சாத்தனார் மாண்புபோற்றப் படுகிறது. ஈசனுக்குரிய எல்லா அம்சத்துடன் பொருந்தி இருமைப்பயனையும் ஈந்தருளும் மாண்பு பெற்றவர். ஆதிசைவராம் கச்சியப்பர் "வந்தனன் எமை வாழ்விக்கும் ஐயனே" என்று தம்மனத் தொடு பொருந்தக் கூறுவதினின்று சிவபரத்துவம் பெற்று அந்தணராதி யாவராலும் போற்றப்படும் இறைவன் என்பது தெற்றெனவிளங்கும், இறைவன் என்னும் பொருளில் வழங்கும் ஐயனரென்னும் சொல் உற்று நோக்கத்தக்கது.

இத்தகைய ஐயனார் தில்லையைச்சார்ந்த சாத்த மங்கலத்தில் தொன்றுதொட்டுக் கோயில் கொண்டு அருள்புரியும் சிறப்பை நினைந்து அப்பெருமான் வரலாற்றை மக்கள் எளிதில் அறிந்து உய்யும்

பொருட்டு, உரத்தூர் வித்வத்திரு சு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் கந்த புராணத்தையும், காஞ்சிப் புராணத்தையும் தழுவி உரை நடையில் எழுதியுள்ளார். அன்னார் மக்கள் மனோபாவம் மாறும் இக்காலத்தில் இந்தச் சிவட்பணியில் சிந்தை செலுத்தியதும் ஐயனார்மீது பனசைச் செந்தமிழ்க் கல்லூரித் தமிழாசிரியர் இயற்றமிழ்ப்புலவர், திரு. நா. இராமலிங்கம் பிள்ளையவர்கள் மக்கள் வழிபாட்டுக்குரிய பதிகங்களை இயற்றித்தந்ததும் மக்கள் செய்த நற்றவப் பேறேயாகும். காலத்திற்கேற்ப மாதர் வழிபாட்டிற்கென்று ஐயனார் சரித்திரக்கும்மி இயற்றித்தந்த கடகம் ஆசிரியர் திரு. தியாகராஜ ஐயர் அவர்கள் தொண்டு போற்றற்குரியது. தனித்துதி பாடும் பணி அடியேனுக்குக்கிடைத்தது என்தவப் பேறேயாகும்.

இவ்வெளியீட்டை, ஆண்டவனுக்குத்தொண்டு புரிவதே தம் வாழ்வின் நோக்கமெனக் கொண்ட சி. சாத்தமங்கலம் மணியம் திரு. ச. அனந்தநாராயணப் பிள்ளை இடையரு அன்பின் முதிர்ச்சியால் அச்சுவாகனமேற்றி வெளியிட்டுள்ளார்கள். அன்னார் ஆண்டவன் அருளால் எல்லா நலனும் பெற்று இனிது வாழ்வாராக

இங்ஙனம்,

28-5-47, சாத்தமங்கலம்.

வித்வான், த. சுந்தரேசன், நகராமலை.

அரிகர புத்திரரென்னும் ஐயனுர் சரிதம்

ஐயனுர் தஞ்சரிதம் யான்விரிக்க வோரைந்து
கையனுர் செம்பொற் கழலிணையை வாழ்த்துவனே.

முன்னொருகாலத்திலே தேவர்களும் அசுரர்களும் நெடுங்காலம் தாம் வாழவேண்டுமென்றெண்ணி, நான்முகன் இருக்கையை நாடிச்சென்று, தங்களுக்குள்ள குறைகளைக்கூறி, அவை நீங்குதற்குரிய உபாயஞ் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். உடனே பிரமதேவர், அவர்களோடு வைகுந்தத்தையடைந்து, பாம்பணையில் பள்ளிகொள்ளும் பரந்தாமனைத் தமது தோத்திர ஒலியால் எழுப்பித் தங்களுக்குள்ள குறைபாடுகளைக்கூறி முறையிட்டனர். திருமால் நெடுநேரம் ஆராய்ந்து நீங்கள், இனி அஞ்ச வேண்டுவதில்லை திருப்பாற்கடலைக்கடைந்து, அமுதத்தை எடுத்து அருந்தினுல், நீண்ட நாள் வாழலாமென்று கூறினர். அப்போது தேவாசுரர்களுக்குண்டாகிய மகிழ்ச்சிக்கு அளவில்லை.

பாற்கடல் கடைதல்.

பின்னர் யாவரும் திருப்பாற்கடலையடைந்து தாம் எண்ணியவாறே மந்தரமலையை மத்தாக நிறுத்தி வாசுகியென்னும் பாம்பைநாணுகச்சுற்றித் தேவர்கள் ஒருபுறமும் அவுணர்கள் மற்றொரு புறமுமாகநின்று திருப்பாற்கடலைக்கடைந்தார்கள்.

விடமெழல்.

வாசுகியென்னும் பாம்போ, பொறுக்கலாற்ருது வாய்நுரையைக் கக்கிப் பெருமூச்செறிந்தது.

எல்லாம் வல்ல ஈசனுகிய சிவபெருமானின் இன்னருளின்றி, எடுத்த செயல் இதுவாதலால் அந்நுரையினின்றும் ஆலாலமென்னும் பெருவிடம் தோன்றி உலகத்தையே தீப்பதாயிற்று. அதனைக்கண்ட தேவர்கள் அஞ்சியோடினர். உடனே, திருமால் அதனுடன் எதிர்த்து நிற்கும் ஆற்றலின்றி விடம் தாக்கியதால் வெண்ணிறம் நீங்கிக் கருநிறம் உற்ருேடினர். பிரமனும், பொன்னிறமிழந்து புகைநிறமடைந்தோடினன். திக்குப்பாலகர்களும் உருமாறி வருந்தினர். யாவரும் அந்த விடத்திற்கு ஆற்ருதவர்களாய், காலோடு காலிடறும்படி கைலையையடைந்து திருக்கோயிலின் திருவாயிலை அணுகினர்.

தேவர்கள் வேண்டுகோள்.

திருமாலும் பிரமனும் திருநந்திதேவரின் அருள் பெற்று உள்ளே சென்று, அம்மையோடு வீற்றிருக்கும் அப்பனை வணங்கினர். இறைவன் அவர்களை நோக்கி, நீவிர் உருமாறியது என்னை? என்று கேட்குங்கால், புறத்தே நின்ற தேவர்களும் முறையிட்டனர். திருக்கைலாயநாதர் தமது திருவருள் கொண்டு, அவர்களை வருவித்து, நீங்கள் எல்லோரும் முகம்வாடி உடல் நடுங்கி வருந்தி நிற்பதற்குரிய துன்பம் யாது? என்று வினவினர். பிரமதேவன் வணங்கி நிகழ்ந்ததை யறிவித்து "தேவரீரது திருவருளின்றிச் செய்வதெல்லாம், "ஒன்றெழியவொன்ருகும்" என்பது உண்மையன்ருே? இப்பொழுதே அடியேங்களைக் காத்தருளுதல்வேண்டும்; இல்லையேல் அடியேங்கள் யாவரும் அழிந்தொழிவோம்" என்று மனங்கலங்கி முறையிட்டனன். சிவபெருமான் அஞ்சற்க என்று அருள்புரிந்தனர்.

கண்ணுதற்பரன் விடத்தைக் கண்டத்தில் அடக்கல்.

பின்னர், தன்னனுக்கத்தொண்டராகிய சுந்தரரைநோக்கி, அந்தவிடத்தைத்தன்னிடம் கொண்டுவரும்படி கட்டளையிட்டனர். சுந்தரரும் அந்த இடத்திற்குச்சென்ற அளவிலே, பரமனருளால் அந்த ஆலாலவிடமானது, செந்தாமரைமலர்மேலுள்ள வண்டு போல சிற்றுருவாயடங்கி அவர் கைவரப்பெற்றது; அவரும் உடனே திருக்கைலைக்குச் சென்று, பரமனிடம் அவ்விடத்தைக்கொடுத்தார். அதனால், அவருக்கு ஆலாலசுந்தரரெனப் பெயருண்டாயிற்று. கருணைக்கடலாகிய சாலசங்காரமூர்த்தி, அவ்விடத்தைக் கையிலேற்றுத் தேவர்களை நோக்கி, இவ்விடத்தை யான் உண்ணுதல் நலமோ? எறிந்து விடுதல் நலமோ? என்று கேட்க, தேவர்கள் ஒன்றுங்கூறாது வாளாவிருந்தனர், பிறகு இறைவன் உமாதேவியாரைநோக்கி இந்த விடம் உனது பார்வையினால், அமுதமாகுமென்று சொல்ல, அம்மையார். உயிர்கள் மேல் வைத்த கருணையாலும், தமதுநாயகன் மேல் வைத்த அன்பினாலும், அந்த விடத்தின் மீது திருக்கண் சாத்தியருளினார். பின்பு, உய்யும்படி அதனையுண்டு கண்டத்திலமைத்தருளினார். அதுகாலையில் தேவர்கள் "சயசயபோற்றி" என்று துதித்து ஆராதித்தனர்.

"நீல கண்டனே போற்றியெண் குணங்களால் நிறைந்த
மூல காரண போற்றிமுன் சிறுவனுக் கிரங்குங்
கால காலனே போற்றியின் றெம்முயிர் காத்த
ஏல வார்குழல் பங்கனே போற்றியென் றிசைத்தார்"

இவ்வாறு துதித்தவுடன், எல்லாம் வல்ல இறைவன் "இனி நீவிர் பாற்கடலைக்கடைந்து அமுதத்தைப் பெற்று உண்டு நீண்ட காலம் இறவாமல் வாழ்வீர்களாக;" என்று விடைகொடுத்தருளினார்.

மீண்டும் பாற்கடல்கடைய அமுதந் தோன்றல்.

திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும், விடைபெற்றுச்சென்று, திருப்பாற்கடலை மேலும் கடைந்தார்கள். விநாயகரை வழிபட்டுத்தொடங்காத குற்றத்தினால், மந்தரமலையாகிய மத்து, நிலை குலைந்து சாய்ந்தது. இவற்றையுணர்ந்த தேவர்கள், விநாயகரை வழிபட்டுத்துதிக்க, மந்தரமலை பழைய நிலையில் நின்றது. மறுபடியும் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். அதுபோது பாற்கடலிலிருந்து மூதேவி, இலக்குமி, சிந்தாமணி, காமதேனு, அரம்பையர்கள், தேவவைத்தியர், ஐராவதம், முதலிய பலபொருள்களும் தோன்றிப் பிறகு, செந்நிறம் வாய்ந்த சந்திரன் தோன்றியதென்று எண்ணும்படி செம்பொன் குடத்தில் தேவாமிர்தம் தோன்றிற்று. தேவர்களும் அவுணர்களும் "எங்களால் தான் அமுதங்கிடைத்தது" என்று மாறுபட்டுப் போர் செய்ய உன்னினர். அதனைத் திருமால் கண்டு, ஓர் உபாயத்தால் அவர்கள் பிணக்கை ஒழிக்க நினைந்து, மூவுலகத்தாரும் விரும்பத்தக்க ஒரு மோகினி வடிவை எடுத்து நின்றார்.

திருமால் மோகினிவடிவம்.

அம்மோகினி, இருண்ட மேகத்தின் தன்மை வாய்ந்த கூந்தலும், பிறைச்சந்திரன் போன்ற

நெற்றியும்; இளஞ் சூரியனின் இன்னொளி போன்ற திலகமும்; கருவேளின் கரும்புவில் போன்ற புருவங்களும்; கண்டார் மயங்குந்தன்மை வாய்ந்து, சிறுஇரேகைகள் படர்ந்து, மைதீட்டப் பெற்று,காதற்களவு நோக்கங்கொண்ட கண்களும், கொவ்வைக்கனி போன்ற அதரங்களோடு கூடிய செவ்வாயும் வாய்ந்து, பூரணச்சந்திரன் போன்ற ஒளியோடு கூடிய முகமாகிய தாமரையையும் பெற்று, கொடி போன்ற இடைதளர்ந்து அசையும் படியாக,தேமல்படர்ந்து,தொய்யில்எழுதப்பெற்றுத் தாமரை அரும்புகளை யொத்த தனபாரங்களோடுங்கூடி, அன்ன நடைவாய்ந்து, காமன் தன் வென்றிக்கொடிபோன்று விளங்கினுள். இத்தகைய அழகுகளோடு கூடிய மோகினியை அவுணர்கள் நாடி, அமுதத்தைவிட்டு, காமப்பித்துக்கொண்டு அறிவழிந்து, மயங்கித் தாருகா வனத்து இருடிகளினும் பார்க்க, ஆசை மிக்கவராயினர். தேவர்களும் பெண்மயலுற்று நின்ருர்கள். "பெரியோர்களுக்கும் மண்ணுசை பொன்னுசைகளினும் பெண்ணுசை நீங்குதல் அரிதன்ருே?"

"எண்ணு வவுணர்தொகை யல்லதை யெந்தை மாயம்
உண்ணுடு வானேர்களும் பெண்மய லுற்று நின்ருர்
மண்ணுசை தன்னிற்பொரு ளாசையின் மாய வாழ்க்கைப்
பெண்ணுசை நீங்க லெளிதோ பெரியோர் தமக்கும்"

இவ்வாறு, இருதிறத்தாரும் மயங்கி நிற்கும் போது, மோகினி வடிவங்கொண்ட திருமால், "விண்ணவர்களை நோக்கி" போரை ஒழிமின்; ஈண்டுயானுமுளன்; அமுதமுமுளது; இவ்விரண்டுள் நீவிர் விரும்பியதொன்றை விரைந்து கைக்கொள்மின்

என்றார். அவுணர்கள் மோகினியின் அழகில் மயங்கி, உன்னையே யாங்கள் விரும்புகின்றோமென் றனர். தேவர்கள் திருமாலின் திருவிளையாடலை யுணர்ந்து யாங்கள் விரும்புவது அமுதமே யென்று அமுதத்தைக் கைக்கொண்டு, ஒருபக்கம் போயினர் அசுரர்கள் மோகினியைக்கொண்டு ஒரு பக்கம் போயினர்; தன்னைக்கொண்டு சென்ற அசுரர்களை மோகினி வடிவங்கொண்ட திருமால் பார்த்து, உங் களில் வலிமையோடு என்னைத்தழுவ வல்ல ஒருவன் உடனே வருகவென்று மாயமொழிகளைக்கூறி, அவர் களை மயக்கி நின்றார். அவுணர்கள் பலரும் இம் மொழிகளைக் கேட்டு 'எனக்கு நிகராய் ஒருவரு மில்லையானே எவரினும் வலியேன். வீரனும் யானே' என்று தனித்தனிக்கூறி, என்னையே சேர்வாய் என்று வந்து கூடி, அதனால் பகைகொண்டு தம்முட் பொருது மாய்ந்தனர். அவ்வவுணர்களுள் இருவர் மாயவன் செய்த மாயத்தை யறிந்து, தேவ வடிவங் கொண்டு, தேவர்களோடு மறைந்து நின்றார்கள். மோகினியாகிய மால் தேவர்களுக்கு அமுதத்தைப் பங்கிட்டுக்கொடுத்து வந்தார்.

இராகு கேதுக்கள் வரலாறு.

திருமால், அமுதத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும் பொழுது தம் உருவை மறைத்து, தேவர்களோடு கலந்து நின்ற அவுணர்கள் இருவரும், தங்களுக்குக் கிடைத்த அமுதத்தை மந்திரத்தோடு உட்கொள் ளாது, தேவர்களுக்கு முந்தி விரைந்து உட்கொள் வாராயினர். இதனை அருகில் நின்ற சூரிய சந்தி ரர்கள் கண்டு, இவர்கள் கள்வர்கள்; அமுதத்தை விரைந்துண்டார்கள் என்றெண்ணி, அவர்களிரு

வரையும் திருமாலுக்குக் கண்ணால் சைகை செய்தனர். கடல்நிறவண்ணனாகிய கண்ணபிரான் அவர்களைக் கோபித்துக் கையிலிருந்த அகப்பையினால், அவர்கள் தலைகளை வீழ்த்தி, தேவர்களுக்கு அமுதத்தை யூட்டி விருந்து செய்தார். உண்ட அமுதங் கழுத்தளவில் சென்றதால், அந்த அசுரர்களது உடல்கள் அழிய, தலைகள்மட்டும் சாதலினின்றும் நீங்கியது. பின்னர், அவர்களிருவரும் சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்து, இராகு கேதுவென்னும் கரும்பாம்பும் செம்பாம்புமாய் சூரியன் முதலிய ஏழுகிரகங்களோடு ஒன்பதின்மர்களாக எண்ணப்பட்டார்கள்.

சிவபெருமான் மோகினியோடு முயங்கல்.

திருமால் முன்கொண்ட மோகினி வடிவத்துடன் திருப்பாற்கடலின் ஒரு புறமிருந்தார். சிவபெருமான், தனக்கு பார்வதி, துர்க்கை, காடுகிழாள், விட்டுணுவாகிய நால்வகைச்சக்திகளுள் திருமாலும் ஒரு சக்தியாகையால், அதனை நம்மனோர்க்கு விளக்கும் பொருட்டு, மோகினியுங் கண்டு மயங்கும்படியான செம்மையிற் சிறந்த சீரிய அழகுக் கோலங்கொண்டு, அவ்விடத்தில் தோன்றினார். இறைவனது அழகிய கோலத்தைக்கண்ட மோகினி, காதல் வயப்பட்டு நாணத்தோடு ஒருபுறம் ஒதுங்கிப் பூமியை நோக்கி நின்றார். இறைவனும் உன்னைக்கூடும் வேட்கை எனக்கும் உண்டு; நீ கொண்ட வேடம் இனிதுஎன்றார். மோகினி இவ்வுருஎனக்குக் கிடைத்தது உமது சத்தியாகிய உமாதேவியாரருளாலன்றோ? அவ்வுமா தேவியாரே உமது அருகிலிருக்க நீர் அடியேனை விரும்புவதென்னை? நீர் உலக

காரணராதலால், முன்னொருகாலத்தில் பிரமாவி னுடைய சிருட்டித்தொழில் கைகூடுமாறு, உமா தேவியைக்கூடவேண்டி வந்து வேண்டினேம், தேவ ரீர் மேனேக்கிய வீரிய முடையரன்றே? உமக்கு யாரிடத்தும் விருப்பு வெறுப்பில்லை. அங்ஙனமாக, "அடியேனைச்சேரும்படி வந்த விருப்பமும் உண்மை யன்று" எம்பெருமானே எக்காரணத்தைக் கருதி வந்திரோ? அதனை அறியேன்; உம்முடைய திருவி ளையாடலை நீரேயன்றி வேறுயாவர் அறியவல்லார் என்றூர். சிவபெருமான் அதுகேட்டு விட்டுணுவே நீயும் நமக்குஒருசத்தியாவாய்; பிரமனைத்தோற்று விக்க முற்காலத்தில் யான் உன்னேடுகூட, பின்உந் தியினுல் பெற்றுயல்லையோ? தாருகாவனத்து முனி வர்களைச் சோதிக்கச் சென்றபோது நீயும் பெண் ணுருக்கொண்டு உடன் வரவில்லையா? ஆகையால் இப்போது உனதழகைக்கண்டு, அனுபவிக்கவே இவண் வந்தனன்: என்றுகூறி மோகினியின் இரு கரங்களையும் பற்றினுர்.

பின்னர் நாவலந்தீவின் வடதிசையில், கடற்க ரைச்சார்பிலுள்ள, சாளக்கிராமமென்ற ஊரில், ஒரு மராமரத்தின் [சாலவிருக்ஷம்] நீழலில், இறை வன் மோகினியாகிய திருமால் மயங்கியின்புறுமாறு கூடினுர். அதுபோது அன்னவர் கான்றுமிழ்ந்தநீர் கண்டகியென்ற ஒரு நதியாகி ஓடிற்று. அந்நதியின் கண் உள்ள நீர்ச்சுழிகளில், வச்சிரதந்தி யென்னும் பொன்னிறமான சில புழுக்கள், முறை முறையாக வந்து தோன்றின. அவை அந்நதியிலுள்ள மண் ணில் கூடுகள் உண்டாக்கிக்கொண்டு சிலநாள் அக் கூடுகளில் வசித்து இறக்கும். புழுக்கள் சக்கரத்

இன் குறியுடையதாக உள்ளும் புறமும் காணப் பட்டதால், அக்கூடுகளும் அக்குறியுடையனவா கவே காணப்படும்; அவற்றை அக்கண்டகிநதிக் கரையில் ஒதுக்கிவிடும்; அக்கூடுகளை உலகத்தார் கொண்டு சென்று, அவற்றின் உள்ளேயிருக்கின்ற பொன்னை எடுத்து, அவற்றின் அடையாளங்களைக் கொண்டு, இன்னின்ன மூர்த்தம் என்று கண்டு, அவற்றைத்திருமாலாகவே பாவித்துப் பூசனை புரி வார்கள். அதன்பெயர் சாளக்கிராமம் என்பதாம்.

ஐயனார் அவதாரம்.

முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானும், திரு மாலாகிய மோகினியும் கூடி இன்புற்றபொழுது ஒருதிருக்குமாரர் திருவவதாரஞ்செய்தார்.

> " இந்த வண்ண மிருக்க முராரியும்
> அந்தி வண்ணத் தமலனு மாகியே
> முந்தி கூடி முயங்கிய வெல்லையில்
> வந்த னன்னெமை வாழ்விக்கு மையனே"

அவர் திருமாலின் அம்சம்பொருந்த கடல்போன்ற கருநிறம் பொருந்திய மேனியும், சிவபெருமானின் அம்சம்பொருந்த, செவ்வானம் போன்ற செந்நிறம் வாய்ந்த சடைகளும், செண்டாயுதம் தரித்தகை யுமாய் உக்கிரத்தோடு தோன்றினார். சிவபெருமான் அந்தத்திருக்குமாரருக்கு அரிகரபுத்திரர் என்ற நாமத்தைச் சூட்டித் தனது உருத்திரகணங்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டார். பின்னர் அவ ருக்குப் பலவரங்களையும் ஈந்து, தனியுலகத்தையும் உண்டாக்கித்தந்து, அவ்வுலகத்திற்குத் தலைமை

யாம் பதவியையும் அளித்தார். பின்பு திருமாலும் இறைவனிடம் விடைபெற்றுத் திரும்பினர்

அரிகரபுத்திரர் அருள்பெறல்.

அரிகரபுத்திரர், மேலும் தனது தந்தையாகிய ஈசனைநோக்கி, உமது திருவருளுக்குரிய தலைமையையும் உதவவேண்டுமென வேண்டினர். ஈசன் தனது மைந்தனாராகிய மாசாத்தனாரை நோக்கி, "இறைமை நமது திருவருளினாலுண்டாவது; திருவருளும் உண்மையான அன்பினாலுண்டாவது: உண்மையன்பும் பத்தியோடு கூடிய பூசையாலுண்டாவது: பூசையிலும் சிவலிங்க பூசையேசிறந்ததாகும்''என்று கூறினர். இறைவன் கூறியவாறு மாசாத்தனார் காஞ்சிமாநகரில் ஈசனது அருட்குறியாகிய சிவலிங்கத்தை நிறுவிப்பூசிக்க; இறைவன் விடைமேல் தோன்றி, தேவர்கள்சூழஇருந்து, அனேகபூதகணங்களையும், தேர், யானை, குதிரை முதலிய பரிவாரங்களையும் நல்கி, பூதகணங்களைக் காக்குந்தலைவராக மணிமுடி சூட்டியருளினர். மேலும் நீ உலகத்து மக்களுக்குள்ள பிணி மூப்புத் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் இன்பங்களைநல்கி, கிராமங்கள் தோறும் வீற்றிருந்து, மழைவளம் முதலிய பல வளங்களைத்தந்தருளுவாய்'' என்று அருளிச்செய்தார். மாசாத்தனாரும் தந்தையாகிய இறைவனின் இன்னருளையுணர்ந்து, விடை பெற்றுத் தம் இருப்பிடம் சென்று, அன்றுமுதல் யானையினை வாகனமாகக்கொண்டு, உலகமுழுவதும் வியாபகமாக இருந்து எவ்வுலகத்தையும் இரவுபகல்என்பதில்லாமல்எந்த நேரத்திலேயும் காப்பாற்றி வருவாராயினர்,

அங்கண் மேவி யரிகர புத்திரன்
சங்கை யில்பெருஞ் சாரதர் தம்மொடும்
எங்கு மாகி யிருந்தெவ் வுலகையுங்
கங்கு லும்பக லெல்லையுங் காப்பனல்

அவ்வரிகரபுத்திரர் மண்ணுலகத்தாராலும், விண்ணுலகத்தாராலும், நான்மறைவல்ல நான்முகனாலும் பூசித்துத் துநிக்கப்படுந்தன்மை வாய்ந்தவர். காத்தற்கடவுளாகிய கண்ணபிரானாலும் புகழப்படும் பெருமை வாய்ந்தவர். உலகத்து அவருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை.

"மண்ண கத்தரும் வானவ ரும்மலர்
அண்ண லுந்தின மர்ச்சிக்கு நீர்மையான்
கண்ண னும்புக ழப்படுங் காட்சியான்
எண்ணி னங்கவ னுக்கெதி ரில்லையே"

ஐயனார் இந்திரனுக்கு அருளல்.

தேவேந்திரன் முன்னொரு காலத்தில் சூரபன்மன் ஆட்சியில் உண்டான துன்பத்திற்கு ஆற்றாது சிவபெருமானிடம் சென்று முறையிடுவதற்காகத் தேவர்களோடு திருக்கைலாயத்திற்குச் செல்ல வுன்னினான். அது போது இந்திராணி தனித்திருக்க மனங்கலங்கினாள். தேவேந்திரனும் அயிராணியைத் தனித்து விட்டுச்சென்றால் சூரபன்மன் முதலியோர் கவர்ந்து செல்வர் ஆதலால் ஐயனாரிடம் அடைக்கலமாகவைத்துச் செல்லலாமென்று எண்ணினான். மாசாத்தனாரின் மாண்புகளை அயிராணிக்குக் கூற அவளும் உடன்பட்டாள். இந்திரன் அவள் உடன்பட்டது கண்டு அரிகரபுத்திரரை வரும்படி தியா

னித்தான். அரிகரபுத்திரரும் அதனையறிந்து பூத கணங்கள் தன்னைச்சூழ வெள்ளை யானை மேற் கொண்டு, பூரணை புட்கலை என்ற இரு சத்திகளோடு அங்கேவந்து தோன்றினர்.

"காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிடர் எண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுற வந்தான்"

தேவேந்திரன் அவரது திருவடிகளில் விழுந்து வணங்கி, துதித்து நின்றான். மாசாத்தனார் தேவேந்திரனை நோக்கி "நீவிரும்பியது யாது சொல்லுதி" என்றார். இந்திரன் எம்பெருமானே! சூரபன்மன் செய்கின்ற துன்பத்தைப் பொறுக்கமுடியாமல், என் மனைவி அயிராணியோடு விண்ணுலகத்தை நீங்கி, இங்கேவந்து மூங்கில் வடிவங்கொண்டு மறைந்து நின்று, சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்து கொண்டிருந்தேன். தேவர்கள் சூரபன்மன்செய்யும் இன்னலைத்தாங்க முடியாமல் அடியேனிடம் வந்து முறையிட்டனர். எல்லாம் வல்ல இறைவனுகிய கைலாயபதிக்கு இதனை விண்ணப்பம் செய்யும் பொருட்டு தேவர்களோடு திருக்கைலாயத்திற்குச் செல்கின்றேன். இவள் இங்குத் தனித்திருந்தால் அவுணர்கள் கவர்ந்து செல்வர் என்று அஞ்சுகின்ருள். இவளை உம்மிடத்து அடைக்கலமாகவைத்துச் செல்கின்றேன். திருக்கைலாய மலைக்குத் தமியேன் போய்த்திரும்பும்வரை, இவளைக் காத்தருளும் என்று சொன்னன். ஐயனர் இந்திரனே! உன் மனையாளை, ஒருதீங்கும் உருதவண்ணம் யாம்நன்கு காத்துக்கொள்வோம். "தனியே இருக்கின்ரு

ளென்று நீ அஞ்சாதே'' அவளை இங்கே வைத்துத் திருக்கைலாய மலைக்குச் செல்வாய்; என்று அருளிச் செய்தார். பின் வீரமாகாளர் என்பவரை அழைத்து "இந்திரன் திருக்கைலைக்குச் செல்கின்முன். அவன் திரும்பும்வரை அயிராணி தனித்திருக்கின்ருள். அவளை ஒரு தீங்கும் அணுகாமல் காப்பாற்றுவாய் என்று கட்டளையிட்டார். இந்திரனும் அயிராணியை நோக்கி "ஐயனர் உன்னைக் காத்துக் கொள்வார் வருந்தாதே ''என்று தெளிவித்து ஐயனரிடம் விடைபெற்றுத் தேவர்களோடு திருக்கைலைக்குச் சென்ருன்.

பின்னர் அயிராணி சீகாழிப்பதியில் ஓர் வனத்தில் இந்திரன் நெடு நாள் வாராமை கண்டு, மனம் வருந்தி, உடல் மெலிந்து தவஞ்செய்து கொண்டிருந்தாள். அஃதவ்வாருக, ஒரு நாள் மிகக் கொடியவளாகிய சூரபன்மன் தங்கை அசமுகி யென்பாள் தன் தோழியாகிய துன்முகியோடு அவ்வனத்தின் அழகைக்கண்டு அங்கு வந்தாள். வந்த அசமுகி அங்கு இந்திராணி இருப்பதைக்கண்டு, அவளைத் தன் தமையன் சூரபன்மனிடம் கொண்டுபோய்ச் சேர்க்க எண்ணி, அவ்விடம் வந்து இந்திராணியை நோக்கி "நீ என் தமையன் சூரபன்மனுக்கு மனைவியாகக்கடவாய்;'' என்று அவள் கைகளைப்பிடித்து இழுத்தாள். உடனே அச்சங்கொண்ட அயிராணி ஐயனரைநோக்கித் துதித்து ஓலமிட்டாள்.

'பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம் விண்ணோர்க் காதியே ஓலம் செண்டார்
கையனே ஓலம் எங்கள் கடவுளே ஓலம் மெய்யர்
மெய்யனே ஓலம் தொல்சீர் வீரனே ஓலம் ஓலம்''

''ஆரணச் சுருதி ஓர்சார் அடலுருத் திரனென் றேத்தும்
காரணக் கடவுள் ஓலம் கடல்பிறத் தெந்தாய் ஓலம்
பூரணைக் கிறைவா ஓலம் புட்கலை கணவா ஓலம்
வாரணத் திறைமேற் கொண்டு வரும்பிரான் ஓலம்
என்றுள்''

இவ்வாறு இந்திராணி ஓலமிடுதலும் ஐயனாரது படைத்தலைவராகிய வீரமாகாளர் அதனைக்கேட்டு அயிராணியே! நீ சிறிதும் அஞ்சாதே என்று கூறி, இந்திராணியின் கைகளைத் தீண்டிய அசமுகி, துன்முகி ஆகிய இருவர்களின் கைகளையும் வெட்டி இந்திராணியைக் காப்பாற்றினர். இவற்றை நாரதரால் கேள்வியுற்ற இந்திரன் திருக்கைலையிலிருந்து அவ்விடம் வந்தான். வீரமாகாளர் இந்திராணியை அவ்விந்திரனிடம் ஒப்புவித்துப் பின்னர், ஐயனாரிடம் போய்ச்சேர்ந்தார்.

அவ்வரிகரபுத்திரர் இறைவன் திருவருளின்படி உலகமுழுதுமுள்ள நகரங்கள், கிராமங்கள் என்ற எல்லா விடங்களிலும் வீற்றிருந்து மக்கட்கு வேண்டிய மழை முதலிய வளங்களை நல்கி, வேண்டுவார் வேண்டியாங்கு இம்மை, மறுமை ஆகிய இருமைப் பேறுகளையுந் தந்து, அருள்புரிந்து வருவாராயினர்.

சி. சாத்தமங்கலத்தில் ஐயனர் வீற்றிருந் தருளல்.

ஏத்தருந்தலமாகிய எழிற்புலியூரென்னும் தில்லைச்சிதம்பரத்தின் மேற்றிசையில், பத்துமைல் தூரத்தில், வடவெள்ளாற்றின்தென்கரையிலுள்ள அகத்தியரால் பூசிக்கப்பெற்ற அகத்தீசர் அமர்ந்துள்ள, நரராமலையென்னும் தலத்தைச்சார்ந்துள்ளதும்; எல்லையில் பல்வளம் செறிந்ததும்; சொக்கநாயகி சமேத சிவலோகநாதர் வீற்றிருந்தருளுவதும் மாசாத்தப் பெருமான் பெயருக்கு ஏற்றதாகஅமைந்துள்ளதுமாகிய சி. சாத்தமங்கலம் என்னும் கிராமத்தில் ஐயனர் சிறப்பாகக் கோயில்கொண்டு, அவ்வூர்மக்கட்கு இன்னருள் புரிந்து வருகின்றார். மேலும் தன்னை வழிபடுகின்ற, வெளியூர் அன்பர்களுக்கும், இம்மைப்பேருகிய கல்வி, செல்வம் மகப்பேறு முதலிய நலன்களைத்தந்து, அவர்கட்குண்டாகும் பிணி, மூப்பு, துன்பங்களை நீக்கி, மறுமைப்பேருகிய வீட்டின்பத்தையும், நல்கி வருதல் வெள்ளிடைமலையாம். ஆதலால் அருகிலிருக்கும் கிராமங்கள், நகரங்கள் ஆகியவைகளிலுள்ள பெரு நிலக்கிழார்களில் பலர், அவ்வையனரின் திருவருளினுல், நன்மணம், பிள்ளைப் பேறு, கல்விப்பேறு முதலிய பல செல்வங்களையடைந்து, அவ்வையனருக்கு ஒவ்வோராண்டும், வைகாசித்திங்கள் விசாகத்தில் முடிவடைகின்ற

தாகிய பத்து நாள் திருவிழாக்களில் ஒவ்வொரு திருவிழாவினையும், ஒவ்வொருவராகப் பங்கெடுத்து நடத்தி, மாசாத்தனாரின் இன்னருளைப் பெற்றுவருகின்றார்கள்.

அவ்விழாக்களில் ஐந்தாநாள் யானைவாகனத்தெழுந்தருளும் சகோபுரக்காட்சியும், இரதோற்சவமும், விசாகத் தீர்த்தவாரியன்று திருக்கல்யாண சேவையும், பதினோராம் நாள் விடாயாற்றியன்று காலை காவடி பூசையும், உச்சிகால பூசை பாவாடையும், இரவு புஷ்பப்பல்லக்குத் திருவுலாக்காட்சியும் சிறந்த திருவிழாவாக்களாகக் கொண்டாடப்படுவது கண்டு களிக்கத்தக்கன. கண்கண்ட தெய்வமெனக் கொண்டாடி அன்பர்கள் அவ்வப்போது செய்யும் பிரார்த்தனைப் பூசையும் ஆண்டவனுக்கு அளிக்கும் காணிக்கைப்பொருளும் பலப்பல.

நாமெல்லாம் ஒவ்வோராண்டும் அவ்வரிகர புத்திரரின் திருவிழாப் பொலிவினைக் கண்குளிரக்கண்டு, நம்மாலான திருத்தொண்டினைப்புரிந்து வருவதுடன், அவரை எந்நாளும் மனம் வாக்குக் காயங்களால், சிந்தித்து, வாழ்த்தி, வணங்குவோமாக.

சுபம். சுபம்.

வையம் நீடுக. மாமழை யோங்குக.

The Crossword Press, Chidambaram. Q-H. S-A.67, C2000.

2

உ

சி. சாத்தமங்கலம்

ஸ்ரீ அரிகரபுத்திர சுவாமி

தோத்திரப் பாக்கள்.

காப்பு.

மங்குல் வளர்சோலை மாபதியாம் நல்லவளந்
தங்கும் புகழ்படைத்த சாத்தன் றன்—மங்கலத்தில்
வீற்றிருந் தேயருளும் வேழமுகத் தைங்கரனைப்
போற்றுவாய் நெஞ்சே புகழ்ந்து.

பதிகம் க

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

நீரணி வேணி யார்ந்த நிமலனு
ரருள்பெற் றோங்கும்
பூரணை கேள்வ னுகும் புனிதனே
யுயர்ந்து மாகம்
சாரணி சோலை சூழும் சாத்தமங்
கலத்தி லென்றுந்
தாரணி யேத்துஞ் சீர்சால்
சாத்தனுந் தேவே போற்றி. (1)

வளமிக மலியும் சாத்த
மங்கல முறை பெம்மானே
உளமலி புவகை யார்ந்த
வொண்டொடி யிருவர் பாங்கில்

இளநகை தோன்ற மேவும்
    இறைவனே யெளிய னேன்றன்
உளமது மகிழும் வண்ணம்
    உவந்தருள் செய்வாய் போற்றி (2)

ஆரணந் தனக்கு மெட்டா
    வநாதியின் மகவாய்த் தோன்றிப்
பூரணை யொருபால் வைகப்
    புட்கலை யொருபால் வைக
வாரண மிவர்ந்து சாத்த
    மங்கலந் தன்னின் மேவி
சீரண வுறவே யார்க்கும்
    செய்யுநின் மலர்த்தாள் போற்றி. (3)

பன்னிய வான்றோர் நூலுட்
    பகரறம் பலவுஞ் செய்யு
நன்னய மோங்கும் வாழ்க்கை
    நாயினேற் கருள்செய் கண்டாய்
மன்னிய வளஞ்சால் சாத்த
    மங்கலத் தன்பர்க் கென்றும்
இன்னல்தீர்த் தருள்வான் வேண்டி
    எழுந்தருள் சாத்த போற்றி. (4)

மீதல மேவுந் தேவர்
    விளங்குபூ தலத்தி னுள்ளோர்
நாதலந் தன்னில் வைத்து
    நாடொறும் போற்றல் செய்ய
மாதல மாகும் சாத்த
    மங்கலத் தமர்ந்து யாரும்
தீதல நெறியில் வாழச்
    செய்தருள் சாத்த போற்றி. (5)

விருந்தினர் தம்மை யோம்பி
விளம்புநல் லிசையும் பெற்றே
வருந்துத லிலாறு நாளும்
வாழ்வுற அருள்செய் தாள்வாய்
தருந்தகை யுடையோர் வாழச்
சாத்தமங் கலத்தி லென்றும்
திருந்திழை யிருபால் மேவத்
திகழ்ந்தருள் ஐயபோற்றி. (6)

நன்பதி யென்றே கண்டு
நாடுநீர்ப் பறவை யாவும்
தன்பெடை யுடனே கூடித்
தண்டுறை யதனி லாடும்
மன்பெருந் தடஞ்சூழ் சாத்த
மங்கல மேவும் தேவே
அன்பர்க ளிடர்தீர்த் தாளு
மரிகர சுதனே போற்றி. (7)

கழையெனக் கலிக்கும் சாலிக்
கழனிசூழ் கமல வாவி
விழைவுறத் திளைத்தே காமர்
வீயெலாஞ் சிறந்து வாழுந்
தழைவுறு வளத்தான் மிக்க
சாத்தமங் கலத்தி னுளுங்
குழையணி தேவி மார்கள்
குலவிவாழ் காரி போற்றி. (8)

தீத்தொழி னீங்கி மேலாஞ்
செந்நெறி யதனில் வைகிப்
பாத்துண வுண்டு வாழும்
பண்பையெற் கருளல் வேண்டும்

ஏத்துநல் லடியார்க் கென்றும்
இடர்கெடுத் தருள்வா னெண்ணிச்
சாத்தமங் கலத்தின் மேவும்
சாத்தனே போற்றி போற்றி. (9)

கண்ணுத லருள்பெற் றோங்கும்
காரியே யெளிய னேற்கு
நண்ணிய துயரந் தீர்த்தே
நாடுநல் லின்ப மேவத்
தண்ணருள் புரிதல் செய்வாய்
சாத்தமங் கலத்தி லன்பர்
எண்ணிய எண்ணி யாங்கே
யீந்தரு ளிறைவா போற்றி. (10)

பதிகம் உ.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்வளர் சாத்த மங்கல மதனில்
சிறப்புறக் கோயில்கொண் டருளும்
கார்வளர் மேனிச் செஞ்சடை யிலகும்
காரியே யென்றனக் கருள்வாய்
தார்வளர் புயத்த இந்திரன் காழித்
தலத்திடைச் சசியினைக் காப்ப
ஏர்வளர் நின்னை யேத்தவாங் கவனுக்
கேன்றநல் லருள்செயுந் தேவே. (1)

நீரணி வேணி நிமலனு மரியு
நேர்மையா மன்புடன் முயங்கத்
தாரணி தழைப்ப வந்தருள் சாத்த
தமியனைக் காப்பதுன் கடன்காண்

பூரணை யொருபால் புட்கலை யொருபால்
பொருந்திமற் றிருவரு மகிழ
ஏரணி சாத்த மங்கலந் தன்னி
லெழுந்தரு ளெந்தையாந் தேவே. (2)

திருமிகு நெல்லும் பொன்னொடு மணியுந்
திகழ்தரு சுற்றமுஞ் சீர்சா
லுருமிகு மக்கள் வாகன மரசா
ளுரிமைநல் லடிமையெண் பொருளு
மருமிகு குழலார் கலைமக ளருளு
மருவிட எளியனுக் கருள்வாய்
தருமிகு சாத்த மங்கல மேவு
சாத்தனென் றேத்துறுந் தேவே. (3)

பிணியடை யாமல் பேயணு காமல்
பேரணுர் செறிமிடி வந்தே
திணியுடை யுலகில் வருந்திடா வண்ணம்
சிறியனேற் கருளுதல் வேண்டும்
மணியுடை வண்ணன் மகிழுமா சுதனே
மாமகிழ் சாத்தமங் கலத்தில்
பணியடி யார்கள் தங்களைக் காக்கும்
பண்புறு சாத்தனாந் தேவே. (4)

உருமலி கற்பி னொண்டொடி யுடனே
யுயரறம் பலவுளுற் றிடவுஞ்
தருமலி யுலகில் தாழ்வுறு வகையுந்
தமியனேன் பெறமகிழ்ந் தருள்வாய்
திருமலி கமல வாவிசூழ்ந் தொளிருஞ்
சீர்பெறு சாத்தமங் கலத்தில்
மருமலி குழலா ரிருவர்பால் மருவ
வயங்குநல் லையனாந் தேவே. (5)

இதமுற அடிய ருளங்தனி லென்றும்
இனிதுறை யெம்பெருங் கோவே
மதிபெறு மமரர்க் குறுமிடை யூறு
வழங்கிடு மசுரரைக் களைவாய்
விதிமுறை சாத்த மங்கலந் தன்னில்
விழாவணி காணுநர்க் கின்பம்
வதியுநல் வாழ்வு தந்தருள் புரிவாய்
வாரண மூர்ந்தருள் தேவே. (6)

விழைவுறு மன்பும் வாய்மையும் பொறையும்
விளங்குநல் லொழுக்கமுந் தருவாய்
குழைவுறு மனத்தார்க் கருள்குணக் குன்றே
குறைவிலா நிதிபல மல்க
மழைவளந் தந்தே மாநிலம் புரக்கு
மாபெருங் கருணைவா ரிதியே
தழைவுறு செந்நெல் கரும்பென வயங்கும்
சாத்தமங் கலம்வளர் தேவே. (7)

நீரமார் வேணி நிமலன தருளால்
நீடுல களித்தரு ளெந்தாய்
வீரமா காளர் நின்றன தேவல்
விழைவுடன் கேட்பவீற் றிருப்போய்
தாரமா யிலகு பூரணை யுடனே
சாத்தமங் கலத்தினில் வாழுந்
தீரனே செய்ய சடையனே யென்றுந்
தேவர்கள் போற்றிடுந் தேவே. (8)

விண்டலம் போற்றும் வேந்தனும் வேண்ட
மேவியே யவற்கருள் செய்தோய்
செண்டொரு கரத்தி லேந்தியே திகழுஞ்
செகமெலாம் புரக்குநல் லரசே

கொண்டலை நிகர்க்கும் வண்ணனே புகழ்மீக்
    கூர்தரு சாத்தமங் கலத்தில்
கண்டெனு மின்சொல் புட்கலை மேவக்
    காட்சிதந் தருளுநற் றேவே. (9)

வாரியி னிறைந்த வளங்கெழு வயலும்
    வயங்குறு பொருளுநற் சார்புஞ்
சீருறு மனையு மக்களு மெய்திச்
    சிறப்புட னெடிதுவாழ் வருள்வாய்
பாரினின் மேலாஞ் சாத்தமங் கலத்திற்
    பண்புறு கோயில்கொண் டருளிக்
காரியென் றேத்த விளங்கிடுங் கோவே
    கருணையார் யோகியாந் தேவே. (10)

தனித் துதி.

நேரிசை வெண்பா.

சீர்சாத்த மங்கலத்திற் செல்வமுற வந்தருளும்
போசர்த்த னென்கின்ற யெம்மானே—தார்சாத்தும்
இந்திரனும் வானவரு மேத்துகின்ற தேவேஎன்
சிந்தைமிசை நின்றருள்வாய் சேர்ந்து.

சீர்பரவு சோலை திகழ்சாத்த மங்கலத்தில்
பார்பரவு மாசாத்தப் பண்ணவன்ற — னேர்பரவு
நல்ல விழாவதனை நாங்காணில் தந்திடுவான்
அல்லல் களைந்தே அருள்

இவை
நகராமலை இயற்றமிழ்ப் புலவர்
திரு. நா. இராமலிங்கம்பிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்றன.

ஐயனார் துதி.

விரிகடல்சூழ் புவியிலுறற் கரியமக்கட்
பிறவியினை மேவிப் பெற்றும்
திரிகரணப் பணிபுரிந்துன் திருவடிக்கா
ளாகுமொரு திறமுங் சாணேன்
புரிகருணைச் சிவன்மகவாய்ப் புகழ்சாத்த
மங்கலத்தே பொருந்தி வாழும்
அரிகரபுத் திரதேவே அடியனுய்யும்
வழிகாட்டி ஆட்செய் வாயே.

பூரணைபுட்கலை துதி.

தாரணியில் சிவனுணை பெற்றிருமைப்
பயன்பலவுந் தந்து காக்கப்
பூரணநல் லுரிமைபெறு மரிகரபுத்
திரனென்னப் புகழ்சாத் தற்குக்
காரணியாய் நிலவிவளந் தருசாத்த
மங்கலத்தே கவின்பெற் ருேங்கும்
பூரணைபுட் கலை யென்னும் சத்திகளின்
பொற்பாதம் போற்றல் செய்வாம்.

சிவலோகநாதர் துதி.

பூவுலக வாழ்வையே வாழ்வெனக் கொண்டவென்
புத்தியை மிகத்திருத்திப்
போற்றுநின் னடியை என்முடிமீது சூட்டிடும்
புனிதநாள் எந்தநாளோ
கோவிலக நண்ணியெமை யாளவரு மூர்த்தியே
குணமிலாக் கொடியேனையும்
குலவுநின் தொண்டர்பணி செய்துநல் லின்பநிலை
கூடஇனி தாண்டருளுவாய்

2

பூவிலுறை திருமாதும் நாவிலுறை கலைமாதும்
பொற்புட னுஞ்றியவர்தம்
புகழ்செல்வ வளனுமெய்த் திகழ்கல்வி நலனும்
பொருந்துபதி யென்றுணர்த்தும்
தாவில்செங் கமலமு மிக்கவெண் கமலமும்
சார்ந்தபூம் பொய்கை சூழும்
சாத்தமங் கலம்வளர் சிவலோக நாதனே
சற்சனர் தொழும் பாதனே.

சொக்கநாயகி துதி.

நக்க னெம்பிரா னருட்டுணை நாடியே பிறப்பாம்
இக்க டல்கடந் தேறிநல் இன்பம தடையத்
தக்க வர்புகழ் சாத்தமங் கலத்தெழுந் தருளும்
சொக்க நாயகி தூய்மல ரடியிணை துதிப்பாம்.

இவை

சீகாழி வித்வான்,
திரு. த. சுந்தரேசாசாரியார் அவர்களால்
இயற்றப்பெற்றன.

உ

சிவமயம்

ஐயனார் சரித்திரக்கும்மி.

காப்பு.

சங்கரன் மோகினி யீன்றரு ளையனாஞ்
சாத்தன் பெருங்கதைக் கும்மிசொல்லச்
செங்கரந் தன்னிலே மாங்கனி யேந்திய
சித்தி விநாயகன் காப்பாமே. (1)

சீர்மலி யும்பரந் தாமனிடஞ் சென்று
தேவருந் தானவ ரும்வணங்கி
நார்மலி யும்மிள மையுடனே யெந்த
நாளுமிருந் திடவேண்டு மென்றார். (2)

என்று வினவிட நன்றெனவே யுங்கள்
எண்ணம் நிறைவேறப் பாற்கடலை
ஒன்றிக் கடைந்திடில் தோன்று மமர்தினை
உண்டிடு வீரென்றான் செந்திருமால் (3)

செந்திரு மாலின் றிருவரு ளாலந்தத்
தேவாசு ரரமிர்தம் பெறவே
மந்தரம் மத்தென வாசுகி நாணென
வாங்கிக் கடைந்தனர் பாற்கடலை (4)

பாற்கட லைக்கடை யும்போது வாசுகிப்
பாம்பும் விடந்தன்னைக் கக்கிடவே
காக்க வேண்டுமென்று தேவர்கள் வேண்டிடக்
கண்ணுத லெண்ணின ருண்டிடவே (5)

உண்டிட வேதன் பாங்க ரமர்ந்தருள்
உத்தமி யம்பிகைப் பார்வையினுல்
கண்ட மட்டிலது தங்கிட வும்நீல
கண்டனென் றியாவரும் போற்றிசெய்தார்
(6)

செய்தருள் பெற்றுக் கடைந்திட மூதேவி
சிதேவி சிந்தா மணிமருத்து
ஐதர மங்கையர் காம தேனுவெள்ளை
யானையா தியாவுந் தோன்றினவே (7)

யாவருந் தோன்றின பின்பசும் பொன்னிறம்
ஏய்ந்த மதியொன்று தோன்றுதல்போல்
சாவா மருந்தான தேவா மிர்தக்குடந்
தானு முதித்ததப் போதுதானே (8)

தானவர் தேவர்கள் கண்டு மகிழ்ந்திது
தங்கள் தங்களுக் கெனச்சினந்து
மானமுடன் போர்புரிந்திட வேதிரு
மாலும்வந் தாரேமோ கினிமின்னுய் (9)

மின்னலைப் போன்ற கொடியிடை யாள்கரு
மேகத்தைப் போன்ற குழலுடையாள்
கன்னலைப் போன்ற மொழியுடையாள்
[வென்றிக்
காமன் கொடிபோ லசைந்திடுவாள் (10)

வாள்விழி மங்கைப் பருவத்தி னுலிந்த
வையக மெல்லாம் மயக்கிடுவாள்
தோளிணை மூங்கி லணையாள் வனப்பினைச்
சொல்வதென் ருலெவர்க் குந்தரமோ (11)

மோகினி மாதின் வடிவழ கைக்கண்டு
மோகங்கொண் டாரந்தத் தானவரும்
லாகிரி யாகித் தாம்போரில் மடிந்தனர்
நல்லமிர் தஞ்சுர ரேபுசித்தார் (12)

புசித்திட அரக்க ரிருவர் மறைந்து
புத்தமு துண்ண விருசுடரும்
அசைத்துக் கண்ணால் குறிப்பிட மோகினி
அகப்பைக் காம்பால் அடித்தனரே (13)

அடித்து மவர்க ளழியாம லெங்கள்
அம்பிகைப் பாகனைத் தான்வணங்கி
கிடைத்து நல்லருள் ராகுகேது வெனுங்
கிரகபதவியை யும்படைத் தார் (14)

தாரணி கொன்றைச் சடைப்பெரு மானருட்
சத்திகள் நால்வரில் மாலுமொரு
காரிகை யாதலின் முக்கட் பெருமானுங்
காமங்கொண் டாரந்த மோகினிமேல் (15)

மேலான நாவலந் தீவினிலே யொரு
சாலா விருக்ஷத்தின் நீழலிலே
மாலான மோகினி லீலா விநோதத்தில்
வந்துதித்தா ரெங்க ளையனாரே (16)

நாரணன் மேனியும் நம்பனார் வேணியும்
நல்ல செண்டாயுத முந்தரித்த
காரண ரான வரிஹர புத்ரரைக்
கணங்களிற் கொண்டாரக் கண்ணுதலே
(17)

தலங்க ளுடனே தக்க வரங்களும்
தலைமைப் பதவியுந் தந்துபல
நலங்க ளருளி மணிமுடி சூட்டினர்
நாரண னுந்தன் னகரடைந்தார் (18)

அடைந்த பின்னர் அரிகர புத்திரர்
அன்புடனே சிவபூசை செய்யத்
தொடர்ந்த காதலிற் கரந்தை வேணியன்
தோன்றி யருளினு ரப்பொழுதே (19)

தேவர்கள் பூத கணங்க ளெல்லாஞ்சூழத்
தேர்யானை வெம்பரி வீரரொடும்
யாவருல குந்துன்பம் பிணி வந்தணு
காம லுலாவியே வந்திடுவார் (20)

வாரண மீதி லுலவிடு வார்பரி
வாகனம் மீதும் வெளிவருவார்
பூரணை புட்கலை மாத ரிருபாற்
பொருந்திட மூவுலகும் புரப்பார் (21)

புரந்தர னூர்திருக் கயி லாயம்
போய்வருங் காறு மிந்திராணியை
விரைந்துடன் காக்கப் படைத்தலை வனுன
வீரமா காளரை யேவினரே (22)

ஏவினதும் மிந்தி ராணிக் கிடையூ
றியற்று மசமுகி துன்முகியின்
மேவுங் கரங்களை வெட்டிச் சசியைவிண்
வேந்தர்க் களித்தனர் வெந்திறலால்
(23)

வெந்திற லையனு ரிந்த விதம்சதுர்
வேதன் முதலோர் தினம்பரவ
வந்தனை கொண்டு மழைமுத லாகிய
மாவள மீந்து வயங்கினரே (24)
ஏத்தும் பெருந்தல மாக விளங்கும்
எங்கள் சிதம்பர க்ஷேத்திரத்தின்
மேற்றிசை தன்னிலே பத்தாவது மைல்
வெள்ளாற் றின்தென் கரைதனிலே (25)
தன்னி லகத்திய மாமுனி போற்றுந்
தலமான முத்தமி ழாளிகள்சேர்
நன்னக ராமலை யென்னுந் தலமிந்த
நானில மேற்புகழ் மேவிடுமே (26)
மேவிய வப்பதிப் பாங்கரி லேதிரு
மேன்மேல் ஓங்கி வளம்பெறுமே
தேவர் தொழுஞ்சொக்க நாயகி சமேத
சிவலோ கநாதர் வீற்றிருப்பார் (27)
இருக்கும் தலமது சாத்தப் பெருமானுர்க்
கேற்ற பெயரா லமைந்ததுவே
விரைக்கம லமலர்ப் பொய்கை சூழ்தர
விளங்கிடுஞ் சாத்த மங்கலமே (28)
சாத்த மங்கல நகரி லையனுர்
சாநித்திய மாகக் கோயில்கொண்டு
காத்துயிர்க் கெல்லாம் கருணை புரிந்து
கண்ணுக்கு முன்னுல் விளங்கிடுவார் (29)
விளங்கி வழிபடும் உள்ளூரன் பருக்கும்
வெளியூ ரில்வரு மன்பருக்கும்
அளவில் செல்வமும் கல்வி மகப்பேறும்
ஆன பலன்களைத் தந்தருள்வார் (30)
மானிலம் வாழி மறைவாழி சாத்த
மங்கலம் வாழி மழைவாழி
தானிக ரின்றித் தமிழ்வாழி யுயர்
சைவமும் வாழிய சீர்மலிந்தே, (31)

இது கடகம், ஆசிரியர்
திரு. தியாகராஜ ஐயரவர்களால்
இயற்றப்பெற்றது.